மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம், அகவிலைப்படி, பண்டிகை முன்பணம் முதலியவை நூலக ஆணைக் குழு ஊழியர்களுக்கும் அளிக்கப்படுகின்றன. பிற சலுகைகள் நிதி நிலை அடிப்படையில் மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள்தோறும் மாற்றத் திற்குரியனவாக உள்ளன.

Physical Education.

* 745 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal to set up special cells for the promotion of Physical education in this State; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அனைத்து ஆசிரியர் பிரிவினர்களுக்கும் இப்போது செலக்ஷன் கிரேடு கொடுக்கப்படுகிறது. ஆனால் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேடு கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கும் செலக்ஷன் கிரேடு கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி நான் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். செகண்டரி கிரேடு ஆசிரியருக்குத் தகுதி பெற்ற சிறப்பாசிரியர்களும் 10 வருடம் பணியாற்றியிருந்தால் தேர்வு-நிலையைப் பெறுவார்கள். அதிலே உடல் பயிற்சி ஆசிரியர்களும் வருவார்கள். ஆணையிலும் அது வரும்.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவரவர்களே, ஆசனப் பயிற்சி செய்வதால் உடல் வலிவு பெறுவது மட்டுமல்லாமல், சில வியாதிகளும் தீருவதாகச் சொல்கிறார்கள். குறிப்பாக சிரசாசனம் செய்தால் மாணவர்களுக்கு மூளை விருத்தியடைந்து புத்தி கூர்மையாகும். ஆகவே ஆசனப் பயிற்சிகளை கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, உடற் பயிற்சிக் கல்லூரிகளில் ஆசனப் பயிற்சிக்கான பாடத் திட்டங்களை வகுத்து பயிற்சி அளிக்கிறார்கள். அங்கே பயிற்சி பெற்று வருகிறவர்கள் மாணவர்களுக்கு அந்த பயிற்சி முறைகளைக் கற்றுக்கொடுக்கிறார்கள். சிரசாசனப் பயிற்சியும் அதில் இடம்பெறும் என்று கருதுகிறேன். இப்போதே கூட சில பல பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆசனப் பயிற்சி அளிக்கப்படுகிறது.